[2016 ஆகஸ்ட் 11

தவிர மாநில அரசால் அல்ல. அந்த இணைப்புச் சாலை அவர்களுடைய பகுதியிலே வருகின்ற காரணத்தினால்தான் நிலம் எடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. தொடர்ந்து மாநில அரசு நிலம் எடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. விரைவில் இணைப்புச் சாலைக்குத் தேவையான நிலத்தை எடுத்து அந்தப் பாலப் பணியை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

53—

மின்மாற்றி

***2058—திரு. தங்கம் தென்னரசு:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சுழி தொகுதி, நரிக்குடி ஊராட்சி ஒன்றியம், தச்சனேந்தல் கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நடந்த ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சிக்கு முதலில் நன்றியும் பாராட்டும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கூடங்குளம் அணுமின் நிலையத்தின் அலகு 1–ஐ நேற்றையதினம் நாட்டுக்கு அர்ப்பணித்திருக்கிறார்கள். அந்த நிகழ்விலே நமது இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் கலந்து கொண்டுள்ளார்கள். ரஷ்ய அதிபரும், பாரதப் பிரதமரும் அந்த விழாவில் கலந்து கொண்டனர். மாண்புமிகு அம்மா அவர்கள் தெளிவாக அந்த மக்களுடைய பயம் போகின்ற*

2016 ஆகஸ்ட் 11]

வகையில், அச்சம் போகின்ற வகையில் திட்டத்தை அதுகாறும் நிறுத்திவைத்து, அதற்கென்று ஒரு கமிட்டி அமைத்து, ரூ.500 கோடி அளவிற்கு அவர்களுக்குப் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்துள்ளார்கள். அந்தத் திட்டத்தின் வாயிலாக (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மக்களுடைய பய உணர்வை அகற்றி, நாட்டுக்குக் கொண்டு வந்த திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்த வேண்டுமென்று, முழு மூச்சோடு செயலாற்றி நேற்றையதினம் நாட்டுக்கு அர்ப்பணித்திருக்கின்ற இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்கள் வணங்கி நன்றியையும் பாராட்டுதல்களையும் இந்த நேரத்தில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

விருதுநகர், தச்சனேந்தல் கிராமத்திற்கு தற்சமயம் 100 K.V.A. மின்மாற்றிமூலம் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல தச்சனேந்தல் கிராமத்தில் தற்போது 100 K.V.A. transformer இருக்கிறது. அந்தப் பகுதி விவசாயம் நிறைந்த பகுதி. அந்தப் பகுதியிலே வீட்டு மின் இணைப்புகளும் அதிகமாக இருக்கின்றன. தச்சனேந்தல் கிராமம் மற்றும் அதைச் சுற்றியுள்ள மற்ற கிராமங்களான எ. முக்குளம், பள்ளப்பட்டி, ஆய்வுகுளம் போன்ற பகுதிகளிலும் இப்போது குறைந்த அழுத்த மின்சாரத்தினாலே மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அங்கே இருக்கின்ற transformer capacity–யில் தச்சனேந்தல் கிராமத்திற்கு 100 K.V.A.–யிலிருந்து 200 K.V.A. ஆகவும், மற்ற கிராமங்களில் இருக்கக்கூடிய transformer capacity–யை உயர்த்தி புதிய மின்மாற்றிகளை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய மின் இணைப்புகள் 12 மட்டும்தான் இருக்கின்றன. வீட்டு மின் இணைப்புகள் 72 இருக்கின்றன. மேல்நிலைத் தொட்டிகள் 7 மட்டும்தான் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போன்று அதிலே மின் பளு அதிகமாக இருக்கும்பட்சத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அதுமட்டுமல்லாமல் கடந்த 9–8–2016 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் மின் மாற்றியை மாற்றிக் கொடுப்பதற்கும் அனுமதி வழங்கிவிட்டார்கள் என்கிற செய்தியையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்மாற்றிகளின் capacity–ஐ அதிகரித்து, நாம் மாற்றி அமைக்கிறோம். ஆனால் மின் கம்பிகள் அதே அளவிலேயே இருக்கின்றன. பழைய கம்பிகளாக இருக்கின்றன. 2.59 மில்லி மீட்டர் கம்பிகளாக இருக்கின்றன. இதுவே, பல இடங்களில் குறைந்த அளவு மின்சாரத்தைக் கொடுக்கக்கூடிய பிரச்சினைகளை உருவாக்குகிறது. ஆகவே, அந்தப் பழைய கம்பிகளை மாற்றி புதிய கம்பிகளை அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், நாங்கூர்–பூம்படாகை மற்றும் சாலை இலுப்பைகுளம்–திய்யனூர் மின் வழித்தடங்கள், சாலையில் செல்லும் மின் கம்பிகள் எல்லாம் தொய்வுற்று கீழே தொங்கிக்கொண்டிருக்கின்றன. அதை நானே நேரடியாகப் பார்க்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, அத்தகைய இடங்களிலே அதனைச் சீரமைக்கக்கூடிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 K.V.A. மின்மாற்றி புதியதாக அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே

2016 ஆகஸ்ட் 11]

ஆணையிட்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருந்தேன். மின்மாற்றி மாற்றுவதற்குக் கிட்டத்தட்ட ஒரு மாத காலத்திலிருந்து 45 நாட்கள் ஆகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையையும் பரிசீலித்து, மின்மாற்றிகள் மாற்றுகின்றபோது, அங்கே தாழ்வாகச் செல்கின்ற மின் கம்பிகள் எல்லாம் உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு, மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஏனென்றால், இனிவருகின்ற காலம் மழைக் காலமாக இருக்கின்றது, விபத்து ஏற்பட்டுவிடக்கூடாது என்பதிலே மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே அறிவுரை வழங்கியிருக்கின்றார்கள். அந்தவகையிலே அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதியில் ஏழுதேசம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் மின்னழுத்தம் குறைவாக உள்ள காரணத்தால், புதுக்கடை துணை மின் நிலையத்தில் தாணுமூட்டு விளையிலிருந்து வளனூர் அரசு நடுநிலைப் பள்ளிக்குச் செல்லும் வழியில் ஏற்கெனவே தெரிந்தெடுக்கப்பட்ட இடத்தில் மின் விநியோகம் செய்வதற்கு மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல், மின்மாற்றிகளில் 70 சதவிகிதத்திலிருந்து 80 சதவிகிதம் மின்பளு இருந்தாலே கூடுதலாக ஒரு மின்மாற்றி அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். அந்தவகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியிலே 19 துணை மின் நிலையங்கள் இருக்கின்றன. எந்தத் துணை மின் நிலையத்திலிருந்து எடுத்துச் செல்வது என்று தெரியவில்லை. நேற்று முன்தினம் மாண்புமிகு அம்மா அவர்கள் 110 விதியின்கீழ் பல்வேறு

மின்மாற்றிகளை மாற்றித் தருவதற்கு அறிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கின்ற மின்மாற்றியில் மின்பளு அதிகமாக இருக்கின்றபட்சத்தில், அதையும் இதிலே சேர்த்து அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *இந்த மாபெரும் வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமன்றத்தில் இரண்டாவது முறை பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், குடந்தை தொகுதியில் மீண்டும் போட்டியிட வாய்ப்பளித்து வெற்றிபெறச் செய்த, என் உயிரினும் மேலான தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) உழைப்பின் உதாரணமாக நாடெங்கும் விளங்கிக்கொண்டிருக்கிற தமிழக சட்டமன்றப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு எங்கள் தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) பல தடைகளையும் தகர்த்தெறிந்து மீண்டும் என்னை இரண்டாவது முறை வெற்றிபெறச் செய்த குடந்தை தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் தொகுதி, சோழபுரம் பேரூராட்சி, 3—வது வார்டு, T.S.P. *நகர், தோப்புத் தெருவிலுள்ள 150* K.V.A. *மற்றும் 110* K.V.A. *மின்மாற்றிகளில் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு சரிசெய்யப்படுகின்றன. சோழபுரம் பேரூராட்சியில்* IPDS *எனப்படும்* Integrated Power Development Scheme *ஒருங்கிணைந்த மின்சார அபிவிருத்தித் திட்டத்தின்மூலம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. க. அன்பழகன்: *புதிய மின்மாற்றிகளை அமைப்பதற்கு அரசு முன்மொழிவுகளை அளிப்பதாகத் தெரிகிறது. எனவே, அந்தப் பணியினை விரைவுபடுத்தி, நிரந்தரத் தீர்வாக சோழபுரம்*

பேரூராட்சியில் புதிய மின்மாற்றி அமைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். கும்பகோணம், கொத்தையூர் பகுதிகளில் மகாமகத்தின்போது 33/11 K.V.A. துணை மின் நிலையம் புதிதாக அமைப்பதற்கு முன்னாள் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் உறுதி கொடுத்திருந்தார்கள். அதன் தற்போதைய நிலை என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த மாவட்டத்தில் 58 துணை மின் நிலையங்கள் இருக்கின்றன. மின்மாற்றிகளைப் பொறுத்தவரையில் அரசினுடைய ஆய்விலே இருக்கின்றது. துணை மின் நிலையம் அமைப்பது தற்போது எந்த நிலைமையில் இருக்கிறது என்று கேட்கின்றார். அதை மாற்றுவதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றால், அதை விரைந்து முடிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். அதுமட்டுமல்லாமல், கடந்த ஐந்தாண்டுக் கால தி.மு.க. ஆட்சியில் 36,674* transformers *மட்டும்தான் மாற்றப்பட்டன. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் சீரான மின்சாரம் வழங்க வேண்டும் என்பதற்காக கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் 60,235 மின்மாற்றிகளை மாற்றியமைத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது. அந்தப் பகுதி விவசாயிகள் நிறைந்த பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், எங்கே மின்பளு அதிகமாக இருக்கின்றதோ, தேவை எங்கே இருப்பினும், அதை உடனடியாக ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*